நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்


# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 5.00

மாசு 06 ஒலி 99 பிரசோற்பத்தி மாசி 22 (05. 03 1992) வியாழன்


### ராஜீவ் காந்தி கொலை

## புலனாய்வுக்குழு தலைவரை வர்மா கமிஷன் விசாரணை!

ராஜீவ் காந்தி கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்த பாதுகாப்புக் குறைபாடுகள் குறித்து விசாரணை செய்துவரும் நீதிபதி வர்மா தனிநபர் கமிஷன் நேற்று சிறப்பு புலனாய்வுக்குழுவின் தலைவர் ஆர். கார்த்திகேயனை விசாரணை செய்தது இவருடன் தமிழக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளையும் விசாரணைக்கமிஷன் இரகஸியமாக விசாரணை செய்தது புலனாய்வுக் குழுவின் தலைவர் கார்த்திகேயனை கமிஷன் இரண்டு நாள்களாக விசாரித்தமை குறிப்பிடத்தக்கது.

● மணலாறு மண்கிண்டிவலை

# குடியேற்றக் காவலரண்கள் மீது புலிகளின் அதிரடிப்படை தாக்கு

## மூன்று நிமிட நேர அதிரடியில் 14 படையினர் பலி

**மணலாறு மாவட்டத்தில் மண்கிண்டிவலை (ஜனகபுர) என்ற சிங்களக் குடியேற்றத்தில் அமைந்திருந்த இராணுவக் காவலரண்கள் மீது புலிகளின் விசேட அதிரடிப்படையினர் தாக்குதல் நடத்தினர். இதில் மூன்று காவலரண்கள் அழிந்தன, 14 படையினர் பலியாகினர், ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.**

நேற்று முன்தினமிரவு 9 20 மணியளவில்புலிகளின் விசேட அதிரடிப்படையினர் இக்குடியேற்றப்பகுதியில் தொடராக அமைந்திருந்த படையினரின் காவலரண்கள் மீது தாக்குதலை ஆரம்பித்தனர்

மூன்று நிமிடங்களே நீடித்த மின்னல் வேகத் தாக்குதலில் மூன்று காவலரண்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன இவற்றிலிருந்த 14 படையினர் பலியாகினர் ஏனைய படையினர் காயங்களுடன் தப்பியோடி விட்டனர்.

நேற்று முன்தினம் மணலாறில் நடந்த இத்தாக்குதலை கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்களும் ஊர்ஜிதம் செய்தனர்.

ஊர்காவற்படையினரின் காவல் நிலையையும் தாண்டி வந்த புலிகள் படையினரின் பாதுகாப்பு நிலைகள் மீது தாக்குதல் நடத்தியதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன இதில் 7 படையினர் பலியானதாகவும் 13 படையினர் படுகாயமடைந்ததாகவும் அவை தெரிவித்தன.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மணலாறு சிங்களக்குடியேற்றத்தில் நடைபெற்ற தாக்குதலில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்.

- ஏ. கே. எல், எம். ஜி - 1
- ரி - 56 துப்பாக்கிகள் - 5
- ரி - 81 துப்பாக்கி - 1
- 303 துப்பாக்கி - 1
- 40 எம். எம், பிஸ்டல் - 1
- ஏ. கே. எல். எம் ஜி, ரம் மகஸீன் - 1
- 40 எம். எம். பிஸ்டல் ஷெல் - 10
- ஜே. ஆர். குண்டு - 5
- ஏ.கே எல் எம்.ஜி லிங் - 900
- ஏ கே. ரவைகள் - 11,000
- ஏ கே. மகஸீன்கள் - 37
- கிளைமோர் வெடிக்கவைக்கும் சாதனம் - 3
- வயர் சுருள் - 1

### ஜனாதிபதி பிரேமதாஸ உத்தரவு

## வவு. விமான நிலைய ஓடுபாதை; தென் புறமாக விஸ்தரிக்க முடிவு

வவுனியா தச்சன்குள விமான நிலைய ஓடுபாதையை வவுனியா நகரை நோக்கி அல்லாமல் தெற்கு புறமாக விஸ்தரிக்குமாறு ஜனாதிபதி பிரேமதாஸ பணித்துள்ளார்

ஓடுபாதையை வவுனியா நகர் நோக்கிய திசையில் விஸ்தரிப்பதினால் பல குடும்பங்கள் வீடுகளை இழக்க வேண்டியநிலை ஏற்படும் எனச் சுட்டிக்காட்டியதைத்தொடர்ந்தே ஓடுபாதையை தெற்குப் பக்கமாக விஸ்தரிக்குமாறு தற்போது பணிக்கப்பட்டுள்ளது

தெற்குப் பக்கமாக ஓடுபாதையை விஸ்தரிப்பதினால் பொதுமக்கள் பாதிப்படைய மாட்டார்கள் என ஜனாதிபதி தரப்பில் தெரிவிக்கப்பட்டதாம்

முன்னதாக விமானநிலைய விஸ்தரிப்பை கைவிடுமாறு கூட்டுப்படைத்தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க பணித்துள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

(முன்வந்த செய்தி உள்ளே)

## வவுனியா ஊரடங்கு நீக்கம்

வவுனியா மாவட்டத்தில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை முதல் நீக்கப்பட்டுள்ளதாக கூட்டுப் படைத்தலைமையகம் அறிவித்தது.

வவுனியாவில் வன்னி விக்ரம III இராணுவ நடவடிக்கையின் பொருட்டு அங்கு ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டமை நினைவிருக்கலாம்.

### அரச தகவல் திணைக்களம்

## புலிகளின் ஆதிக்கம் குறித்த லங்கா தீப செய்திக்கு மறுப்பு

வடக்கு கிழக்குப் பகுதியின் மூன்றில் இரண்டு பங்கு புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது என நேற்றைய லங்கா தீப சிங்கள தினசரி வெளியிட்ட தலைப்புச் செய்திக்கு தகவல் திணைக்களம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண சபை பிரதம செயலர் கணேசநாதனின் தகவலை மேற்கோள்காட்டி லங்காதீப செய்தி வெளியிட்டிருந்தது.

இதைத் தவிர வடக்கு கிழக்கின் 39 உதவி அரச அதிபர் பிரிவுகளில் 27 உதவி அரச அதிபர் பிரிவுகள் புலிகள் கட்டுப்பாட்டில் உள்ளதாக கணேசநாதன் குறிப்

—04 ஆம் பக்கம் பார்க்க

## காரைநகர், பலாலியிலிருந்து படையினர் ஷெல் தாக்குதல

பலாலி இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் கட்டுவன், குரும்பசிட்டி, வயாவிளான் ஆகிய பகுதிகளை நோக்கி நேற்று நண்பகல் 12 மணியளவில் இருந்து ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

காரைநகர் இராணுவ முகாமில் இருந்தும் இராணுவத்தினர் கோவளம், பொன்னாலை போன்ற பகுதிகளில் உள்ள குடிமனைகளை நோக்கி நேற்றுமுன்தினம் இரவு ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். 47-07

## பூநகரியிலிருந்து ஷெல் இளம் பெண் படுகாயம்

அரியாலை கிழக்கு பூம்புகார் பகுதியை நோக்கி பூநகரி - கல்முனை பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று நண்பகல் 12. 30 மணியளவில் கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்த ஷெல்களில் ஒன்று பூம்புகாரில் வீழ்ந்து வெடித்ததில் பா. நாகேஸ்வரி (24) என்பவர் படுகாயமடைந்தார்

இரண்டு ஷெல்கள் கடலில் வீழ்ந்து வெடித்ததாக கூறப்படுகிறது. (47-04-07)

● அராலியில் நடந்த பரிதாபகரச் சம்பவம்

# ஊர்காவற்துறையில் இருந்து ஷெல் தாக்குதல்

# ஒரே வீட்டினுள் ஐவர் துடிதுடித்து மரணம்!

நேற்றுமுன்தினம் இரவு 12 மணியளவில் ஊர்காவற்றுறையில் இருந்து இராணுவத்தினரால் ஏவப்பட்ட ஷெல் ஒன்று அராலி கிழக்கு பிள்ளையார் கோவிலடியில் உள்ள விஜயரத்தினம் என்பவரது வீட்டில் விழுந்து வெடித்ததனால் இரண்டு குடும்பங்களைசேர்ந்த ஐந்து பேர் ஸ்தலத்திலேயே பலியாகினர். இருவர் பலத்த காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இராமலிங்கம் பொன்னுத்துரை என்பவரது குடும்பத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை வள்ளியம்மை (48), மகன் பொ. சிவகுமார் (12), மகன் பொ.சந்திரகுமார் (8), ஆகிய மூவரும் லோகநாதன் குடும்பத்தைச் சேர்ந்தவரும் இறந்த வள்ளியம்மையின் பேரப்பிள்ளைகளுமான லோகநாதன்யோகரஞ்சி(10), லோகநாதன் யோகரஞ்சிதமலர்(04) ஆகிய இருவருமாக மொத்தம் ஐவர் ஸ்தலத்திலேயே பலியாகினர்.

ஸ்தலத்திலேயே பலியான வள்ளியம்மையின் மகளான லோகநாதன் யோகேஸ்வரி(28), மகன் லோகநாதன் யோகேஸ்வரன் (07) ஆகிய இருவரும் பலத்த காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காரைநகரில் இராணுவத்தினர் நிலைகொண்டதையடுத்து பொன்னாலைகுடியேற்றத்திட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மூன்று குடும்பத்தினரும் சரவணையில் இருந்து இடம்பெயர்ந்து வந்த இரண்டுகுடும்பத்தினரும் அராலி கிழக்கில் உள்ள மேற்படி வீட்டில் அகதிக்குடும்பங்களாகத் தங்கியிருந்தனர்.

ஏனைய குடும்பத்தவர்கள் அறைகளிலும் ஏனைய விறாந்தைகளிலும் படுத்திருந்தமையால் மயிரிழையில் உயிர்தப்பினர். 18, 07

# 'உணவில் தன்னிறைவுகாண மாற்றுவழிச் சிந்தனை தேவை'

இன்றைய காலகட்டம் தமிழீழ மக்கள் தங்கள் உணவுத் தேவையில் தன்னிறைவு காண வேண்டிய கட்டாயத்தை எமக்கும் போதித்து நிற்கிறது.

1981 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பின்படியும் வருடாந்த வளர்ச்சி வீதத்தின் அடிப்படையிலும், 1991 இல் இடம்பெயர்ந்த மக்கள் உட்பட எதிர்பார்க்கப்படும் தமிழர் சனத்தொகை 15 இலட்சமாகும்.

போர் நெருக்கடிக்கு முன்னர் வட தமிழீழத்தின் நெல் உற்பத்தி இப்பகுதிவாழ் மக்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்யக் கூடியதாயிருப்பினும் தற்போதைய நெருக்கடி நிலைமையில் பயிர் செய்யக் கூடிய விளை நிலங்கள் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாலும் பயிர் செய்யப்படும் நிலங்களுக்கு கூட போதிய உள்ளீடுகள் இல்லாமையால் மிகக் குறைந்த அளவு விளைச்சலே கிடைத்துள்ளதாலும் எமது பிரதான உணவான அரிசிக்குக் கூட நாம் மாற்றான் கையை எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

அத்துடன் எம் மக்களின் உணவுப் பழக்கத்தில் கணிசமான பங்கினை கோதுமை மா வகிக்கின்றது. ஸ்ரீலங்காவில் உணவு ஐந்தொகையின்படி வட தமிழீழத்தில் கோதுமை மாவின் வருடாந்த நுகர்ச்சியளவு 38 000 மெ. தொன் ஆகும். இந்தளவு மாவிற்குப் பிரதியீடாக அரிசி மாவை உபயோகிப்பதற்கு நெல் 28,235 ஹெக்டயர் நிலத்தில் பயிரிடப்படல் வேண்டும்.

ஆனால் தற்போதைய நெருக்கடி காலத்தில் நெல் செய்யப்படும் நிலப்பரப்பை அதிகரிப்பது சாத்தியமற்றது எனவே நாம் உணவில் தன்னிறைவு காண மாற்று வழிகளைச் சிந்திப்பது அவசியமாகின்றது.

கூடியளவு கலோரிச் சக்தியை அளிக்கக்கூடிய மரவள்ளியை நாம் எமது உணவுப் பழக்கத்தில் பிரதான உணவாகச் சேர்த்துக் கொள்வதால் அரிசி, கோதுமை பற்றாக்குறையால் ஏற்படும் சக்திக் குறைவை தவிர்த்துக் கொள்ளலாம். அத்துடன் வரட்சியைத் தாங்கக் கூடியனவாயும் குறைந்த உள்ளீடுகளுடன் விளைச்சலைத் தரக் கூடியனவையுமான தானியங்கள். சாமை, தினை, பயறு, உழுந்து, கௌபி போன்றவற்றைக் கூடிய நிலப்பரப்பில் பயிர் செய்யவேண்டும்.

89/90 பெரும்போகத்தில் உற்பத்திப் புள்ளி விவரங்களின்படி வட தமிழீழத்தின் நுகர்வுக்காகக் கிடைத்த உழுந்து 10945 மெற்றிக் தொன்னாகும். கணிப்பீட்டின்படி வட தமிழீழத்தின் ஒரு வருட உழுந்துத் தேவை 1,900 மெற்றிக் தொன்னாகும். உழுந்து தவிர்ந்த ஏனைய தானியங்கள், பயறு, கௌபி, மரவள்ளி ஆகியவற்றின் உற்பத்தி எமது தேவையைப் பூர்த்தி செய்யவில்லை என்பதைப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

எனவே தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு, உள்ளீடுகளின்மை, உணவுப் பற்றாக்குறை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு 93 சிறுபோகத்திலும், 92/93 பெரும்போகத்திலும் பணப்பயிரை விடுத்து உணவுப் பயிரைப் பயிரிடுவதன் மூலம் உணவுக்காக மாற்றான் கையை எதிர்பாராமல் இருக்க முடியும்.

தமிழீழ ஆய்வு நிறுவனம்

# நீர்வளங்களைப் பாதுகாக்க புதிய திட்டம் தயாராகிறது

தமிழீழ ஆய்வு நிறுவனத்தில் தேசநிர்மாணிகள் பிரிவின் அனுசரணையுடன் யாழ் குடாநாட்டு நீர்வளங்களைப் பாதுகாப்பது தொடர்பாகப் பெருந் திட்டம் ஒன்றை யாழ், பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையிலான குழு தயாரித்து வருகிறது.

புவியியல் அமைப்பு, நீரின் பாவனை, நன்னீரைத் தேக்குதல், உவர்நீர்த் தடுப்பு ஆகிய சகல அம்சங்களும் ஆராயப்பட்டு இப்பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது என தமிழீழ ஆய்வு நிறுவனம் அறிவித்துள்ளது.

## விமானக் குண்டுவெடிப்பு விவகாரம்;
# சர்வதேச நீதிமன்றத்தில் லிபியாவினால் ஒப்படைப்பு!

அமெரிக்கப் பயணிகள் விமானம் ஒன்று குண்டு வைத்து 1988 ஆம் வருடம் தகர்க்கப்பட்டது தொடர்பாக அமெரிக்காவுடனும், பிரிட்டனுடனும் தனக்குள்ள சிக்கலை லிபியா சர்வதேச நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றுள்ளது.

லிபியத் தூதர் அதிகாரபூர்வக் குற்றச்சாட்டை நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தார் என்று ஏஜென்ஸிச்செய்திகள் கூறின.

சர்வதேச நீதிமன்றம் தேவையான துரித நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று தமது அரசு கேட்டுக்கொண்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

இக் குண்டுவெடிப்பில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இரு லிபிய நாட்டவரையும் ஒப்படைக்குமாறு ஐ.நா.பாதுகாப்புச் சபையின் ஆதரவுடன் அமெரிக்காவும், பிரிட்டனும் லிபியாவை நெருக்குதல் செய்துவருவது குறிப்பிடத்தக்கது.

# பர்மிய ராணுவ அரசு மீது மனித உரிமைக்குழு சாடல்

பர்மாவில் மனித உரிமைகள் அதிகளவில் மீறப்பட்டு வருவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றம் சுமத்தியுள்ளது.

இது சம்பந்தமான கூட்டம் ஜெனிவாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நிலைமையைக் கண்டறிய விசேட பிரதிநிதி ஒருவர் அங்கு அனுப்பப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

31 நாடுகள் இத்தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன.

பர்மாவின் இராணுவ அரசாங்கம் தீவிர கண்டனத்துக்கு உள்ளானது.

இதற்கிடையில் பர்மாவிலிருந்து முஸ்லிம் அகதிகள் நாளொன்றுக்கு ஐயாயிரம் தொடக்கம் ஏழாயிரம் பேர் வரை பங்களாதேஷுக்குத் தப்பிச் சென்றவாறு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கோர விபத்துகள் ரஷ்யாவில்

மாஸ்கோ நோக்கிச் சென்றுகொண்டிருந்த கடுகதி பயணிகள் ரயில்ஒன்று சரக்குரயிலுடன் மோதியதால் தீப்பற்றிக் கொண்டது 20பேர் கொல்லப்பட்டுள்ளனர், 43 பேர் காயமடைந்தனர், 3 பயணிகள் பெட்டிகள் தீக்கிரையாகின

## வருடாந்தக் கூட்டம்

பண்ணாகம் ஸ்ரீமுருகன் சனசமூக சேவா வாலிபர் சங்கத்தின் 56 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

## கரபந்தாட்ட விரிவுரை வகுப்புக்கள்

யாழ் கரபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்டுவரும், கரபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான விரிவுரை வகுப்புக்களின் தொடர்ச்சி எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் இறிதவக் கல்லூரியில் நடைபெறும்.

இவ் விரிவுரை வகுப்புக்கள் சிறப்பாக நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளையும் சம்மேளன உப- செயலாளர் ஜீ வைரமுத்து (விளையாட்டுத்துறை அதிகாரி) செய்து வருகிறார். (16)

# விளையாட்டு மைதானம்

## ஸ்ரான்லி - இந்து போட்டி

பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கெற் போட்டியில் ஸ்ரான்லிக் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்குமிடையில் இடம்பெற்ற ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி 142 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தது.

அதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக்கல்லூரி சகல விக்கற்றுக்களையும் இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றது.

ஸ்ரான்லிக் கல்லூரி அதன் இரண்டாவது இனிங்ஸில் ஒரு விக்கெற் இழப்பிற்கு 35 ஓட்டங்களைப் பெற்று ஆடிக்கொண்டிருக்கையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

## சென்.மேரிஸ் வெற்றி

அமரர் கலாநிதி ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ் உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டப் போட்டியின் அரை இறுதி ஆட்டம் ஒன்றில் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி தனை எதிர்த்து மோதிய வைக்கிங் அணியை 2:0 என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்தது.

தொடக்க முதல் கடும் போட்டியாய் இருந்த இந்த ஆட்டத்தில் அரை இடைவேளைக்கு முன்பு சென்.மேரிஸ் அணி ஒரு கோலைப் போட்டு முன்னணியில் நின்றது. இடைவெளியின் பின் சென்.மேரிஸ் அணி மீண்டும் ஒரு கோலைப் போட்டு தனது வெற்றியை நிச்சயப்படுத்திக் கொண்டது. கடைசி வரை உற்சாகம் குன்றாமல் ஆடிய வைக்கிங் அணியினால் ஒரு கோலைத்தானும் போட இயலாது போய் விட்டது.

நடுவராக எம் பிறான்சிசும், உதவி நடுவர்களாக ஜீ. எம். செபஸ்தியாம்பிள்ளை, எஸ் நரேந்திரன் ஆகியோரும் கடமையாற்றினார்கள்.

## பொழுது சாய்ந்ததால் இடையில் நின்றுபோன போட்டி

நல்லூர் கொற்று சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்டு வந்த 'செற் ஆஸ்' முறையிலான கரபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் நிலைய மைதானத்தில் இடம்பெற்ற பொழுது சென். அந்தனீஸ் அணியை எதிர்த்துக் காங்கேசன்துறை அணி ஆடியது

ஆரம்ப முதல் கடும்போட்டி நிலவிய வெகு விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் தலா இரண்டு செற்றுகளைப் பெற்று இறுதி 'செற்' நடந்து கொண்டிருக்கையில் பொழுது சாய்ந்து வெளிச்சம் போதாமையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. மீண்டும் எதிர்வரும் 7 ஆம் திகதி இது நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிக்கு நடுவராக எஸ் கே இராசரெட்டினமும் துணை நடுவராக கே.நாகேந்திரனும் கடமையாற்றினார்கள்.

இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினர்களாக யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் எம் டி.தம்பிராசாவும், யாழ்.கரபந்தாட்ட சம்மேளனத் தலைவர் கவிரின் டீ. ஏ. எம். குணசிங்கமும், சிறப்பு விருந்தினராக அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தலைவர் எம். பஞ்சலிங்கமும் கலந்து கொண்டனர். (16)

# 'சிறுபான்மை இனஉரிமை மறுக்க எவருக்கும் உரிமை இல்லை'

## கூறுபவர் ஜனாதிபதி பிரேமதாஸ

"சிறுபான்மையினரின் உரிமைகளை மறுக்க எவருக்கும் உரிமையில்லை" இப்படிக் கூறியிருப்பவர் ஸ்ரீலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ ஆவார்

'மக்களில் சிலர்சிறுபான்மை இனத்திலும் மற்றும் சிலர் பெரும்பான்மை இனத்திலும் பிறப்பது உண்மையிலேயே ஒரு விபத்தாகும். சிறுபான்மை இனம் என்பதனால் அதன் முக்கியத்துவத்தை மறைக்கவோ, மனித அடிப்படை உரிமைகளை மறுக்கவோ எவருக்கும் உரிமை கிடையாது என்பதை இங்கு மிக உறுதியோடு கூறிவைக்க விரும்புகின்றேன்" என்று அவர் நேற்று முன்தினம் கொழும்பு இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

"இதைப் பேச்சில் மாத்திரமின்றிச் செயலிலும் எனது அரசு காட்டி வருவதை நீங்கள் நன்றாக உணர்ந்திருப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

# யாழ். வரமுடியாது 200 பயணிகள் வவுனியாவில் அவதி

வடபகுதிக்கான போக்குவரத்துத் தொடர்ந்தும் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் இருநூறு பேர் வவுனியாவில் அவதிப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வன்னி மாவட்டத்தில் தொடர்ந்தும் முழுநேர ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்படுவதால் வவுனியாவிலிருந்து வடபகுதிக்கான போக்குவரத்துக்கள் ஐந்து நாட்களாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திற்குச் செல்வதற்கெனக் கொழும்பிலிருந்து வந்த சுமார் 200 பேர் வவுனியா ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள மண்டபத்தில் தங்கியிருக்கின்றனர் என்றும் இவர்கள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

# வவுனியா விமானத்தள விஸ்தரிப்பை நிறுத்தப் பணிப்பு

வவுனியா - தச்சன்குளம் விமானத்தள விஸ்தரிப்பை உடனடியாக நிறுத்துமாறு கூட்டுப் படைத்தளபதி பணித்துள்ளார்.

இத்தகவலை நேற்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இவ் விஸ்தரிப்பு நடவடிக்கை முயற்சிகளை உடன் நிறுத்துமாறு கூட்டுப்படைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க உத்தரவிட்டுள்ளார் என்று இச்செய்திகள் கூறின.

ஜனாதிபதிக்கு இவ்விடயம் குறித்து கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதனை அடுத்தே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அறிய வருகிறது.

மேற்படித் தளத்தை மேலும் விஸ்தரிப்பதற்கென அப்பகுதியில் மேலும் பல காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளதாக கடந்த சில தினங்களுக்குமுன் அறிவிக்கப்பட்டிருந்தது என்பதும் ஸ்ரீலங்காவின் இரண்டாவது மிகப்பெரிய விமானத்தளமாக இதனை மாற்றும் நடவடிக்கையே இது என்று கூறப்பட்டிருந்தது என்பதும் தெரிந்தவையே.

## கொழும்பு நகரில் மாணவர் கும்மாளம்; பொலிஸ் தடை

கொழும்பு நகரிலுள்ள பெரிய பாடசாலைகளின் கிரிக்கெற் போட்டிகள் நடைபெறும்போது பழைய மாணவர்களோ அல்லது தற்போதைய மாணவர்களோ லொறிகள், திறந்த ட்ரக் வண்டிகள் அல்லது பயணிகள் போக்குவரத்துக்குப் பதிவுசெய்யப்படாத வாகனங்களில் நகரில் சுற்றித் திரிய அனுமதிக்கப்படமாட்டார்கள் என எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் கிரிக்கெற் ரசிகர்களின் சேட்டைகளுக்குப் பொலிஸாரால் ஆப்புவைக்கப்பட்டுள்ளதாகவும், கும்மாளம் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வலைவீசும் வேளை அட்டையும் வேண்டுமென நிபந்தனை

மட்டக்களப்பு கல்லடிப் பாலத்திலிருந்து புதுப்பாலம் வரையிலான வாவியில் இரவில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது

ஆனால் மீனவர், மட்டக்களப்பு மீன்பிடித் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை வைத்திருக்கவேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது.

மாலை ஆறுமணி முதல் காலை ஆறுமணி வரை மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படும் என்று பொலிஸார் கூறியுள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது,

## மரத்தறிப்பைத் தடுக்கவும் பொலிஸ்-இராணுவம் கூட்டு

லபுகம, கலத்வெல நீர்த்தேக்கங்கள் அமைந்துள்ள சுற்றுப்புறக் காடுகளில் சட்டவிரோதமாக மரங்களை வெட்டுவோருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள பொலிஸாரும், இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

நாட்டின் பிரதானமான இந் நீர்த்தேக்கச் சுற்றாடலில் மரங்களை வெட்டுவதில் வர்த்தகர்களும் அதிகாரிகளும் இயங்கி வந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## தெருக்கூத்து

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கடற்புலிகள் மகளிர் முன்னணியினரால் நேற்று முன்தினம் யாழ் நகரின் பல இடங்களிலும் தெருக்கூத்துகள் நடத்தப்பட்டன. (47)

## இந்தியப் புலமைப் பரிசில் விண்ணப்பத் திகதி நீடிப்பு

கல்வி, உயர்கல்வியமைச்சினால் கோரப்பட்டிருந்த இந்தியப் புலமைப் பரிசில் பெற்றுப் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது

கூடுதலான மலையக மாணவர்கள் விண்ணப்பிப்பதற்காகவே இத் திகதி நீடிப்புக்குத்தான் ஆவன செய்ததாக அமைச்சர் எஸ்.தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து விண்ணப்பங்களை அனுப்பலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் விண்ணப்ப இறுதித் திகதி பெப்ரவரி 28 என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

---

(நேற்றைய தொடர்ச்சி)

அரசியல் அவதானிப்புகள்:

## தமிழீழ அகதிகளை தமிழகம் திருப்பியனுப்புவது தமிழக வரலாற்றில் ஓர் வடு

- எஸ். ஜி. எம்.

"செத்தால் கூட சொந்த நாட்டில் சாகலாம்" என வேறு இருவர் கூறினர்.

குடும்ப அட்டை இல்லை என்பதற்காக அருளர் என்பவர் திருவையாறு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார். இவரை விடுவிக்க முயன்ற அவர் மனைவி சுகந்தி" என் கணவரை விடுதலை செய்ய பொலிஸ் ஆயிரம் ரூபா கேட்டது. பணத்திற்கு நான் எங்கே போவேன்" என்று கேட்டிருக்கிறார்.

இத்தனை கெடுபிடிகள், நெருக்குதல்கள், வற்புறுத்தல்கள் என்பனவற்றிற்கு மத்தியில்தான் சுமார் 4500 அகதிகள் வரை தமிழகத்தில் இருந்து திருகோணமலைக்கும் மன்னாருக்கும் வந்து சேர்ந்திருக்கின்றனர்

சென்ற வாரம் இந்திய நாடாளுமன்றத்தில் தமிழீழ அகதிகள் நாடு திரும்புவது பற்றிப் பேசிய உள்துறை இணை அமைச்சர் எம் எம். ஜேக்கப் எவரையும் நிர்ப்பந்தித்து திருப்பியனுப்பும் எண்ணம் தமக்கு இல்லையெனக் கூறியுள்ளார்.

### தமிழக அரசின் மந்தப்புத்தி

இவையெல்லாம் தமிழக அரசினதும், முதலமைச்சரதும் மந்தப் புத்தியையே காட்டுகிறது. ராஜீவ்காந்தி கொலை பற்றி வடக்கிலுள்ளவர்களே அதிகம் அலட்டிக் கொள்ளாத வேளை, தாம் இந்திய தேசியத்துக்கு அதிகம் விசுவாசம் உள்ளவர்கள் எனக்காட்டிக் கொள்ளத் தமிழக முதல்வரும் அரசும், முயல்கின்றனர். இந்திய மத்திய அரசு கூட மெத்தனமான கொள்கையைத்தான் கடைப்பிடிக்கிறது. ஆனால் தமிழகம் மட்டும் பழிவாங்குகிறது, தமிழகத்தில் தங்கியிருக்கும் எண்ணிக்கையிலும் பன்மடங்கு தமிழீழ மக்கள் "அகதிகள் அந்தஸ்து" பெற்றுக் கொண்டு பல மேலை நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்: அதில் ஒருநாடுகூட இதுவரை அவர்களைத் திருப்பியனுப்ப நினைக்கவில்லை.

### வரலாற்று வடு

தஞ்சம் என்று வந்தவர்க்கு அன்னையாக இருக்க வேண்டிய தமிழகம் தன் இனத்தமிழர்களையே விரட்டியடிக்கும் நிகழ்வு தமிழின வரலாற்றில் ஒரு கறை படிந்தவடுவாகவே குறிக்கப்படும்.

(முற்றும்)

---

## பாடசாலைகளில் அபிவிருத்தி நிதியம்; விரைவில் சட்டமூலம்

ஒவ்வொரு பாடசாலையிலும் பாடசாலை அபிவிருத்தி நிதியம் ஆரம்பிக்கப்படவேண்டும் என்று ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளின் அபிவிருத்தி கருதி இந் நிதியம் ஆரம்பிக்கப் படவேண்டும் என்ற அடிப்படையில் இதற்கான புதிய சட்டமூலம் ஒன்று விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் சொன்னார்.

மேல் மாகாணசபை தீர்மானம்

# இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கலில் புதிய முறை

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு ஜனவரி மாதம் முதல் சம்பளம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

வட, கிழக்கு மாகாணங்களில் இயல்பு நிலை உள்ள பகுதிகளிலிருந்து மேல் மாகாணத்திற்கு இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் தம் சம்பளத்தை வட, கிழக்கில் தாம் கடமையாற்றிய பாடசாலைகளிலேயே பெறவேண்டும் என்றும் ஜனவரி முதல் மேல் மாகாணசபை இவர்களுக்குச் சம்பளம் வழங்குவதனை நிறுத்திக்கொண்டுவிட்டது என்றும் வட, கிழக்கில் படையினரின் கட்டுப்பாடில்லாத பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு மாத்திரமே மேல் மாகாணசபை தொடர்ந்தும் சம்பளம் வழங்கும் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்புப் பாடசாலைகளில் பணிபுரியும் இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் பலருக்குக் கடந்த இரு மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படாதது பற்றி கல்வி ராஜாங்க அமைச்சிடம் வினவப்பட்டபோதே இத் தகவல்கள் வெளியிடப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

## ★ தற்காலிக ஆசிரியர்க்கான விண்ணப்பம் கோருதல் தாமதமாகுமென தகவல்

யாழ். கோட்டத்தில் மேலும் தற்காலிக ஆசிரியர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களைக் கோருவது தாமதம் ஆகலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். கல்வித் திணைக்களத்தால் அண்மையில் 120 தற்காலிக ஆசிரியர்கள் யாழ். கோட்டப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டனர்.

ஆனால் மீண்டும் தற்காலிக ஆசிரியர்களைப் புதிதாக நியமிப்பது பின்போடப்பட்டிருப்பதாக யாழ் கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (47)

## விசர்நாய்க்கடி தடுப்பூசி யாழ். வைத்தியசாலையில் இல்லை

சென்ற மாத இறுதியில் 'குமண' கப்பலில் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்ட விசர் நாய்க்கடி தடுப்பூசி மருந்து யாழ் போதனா வைத்தியசாலையில் முடிந்து விட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்து வரும் கப்பலில் இம்மருந்து வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் இவ்வட்டாரங்கள் மேலும் கூறின. (47)

## வாஷிங்டன் கூட்டத்தில் ரஷ்ய அதிபரும் இணைவார்

எதிர் வரும் ஜூன் மாதம் வாஷிங்டனில் நடைபெறவுள்ள உச்சி நிலைக் கூட்டத்தில் பங்கேற்பதற்கான அழைப்பை ரஷ்ய அதிபர் யெல்ஸின் ஏற்றுக்கொண்டுள்ளார்,

இத்தகவலை வெளியிட்ட அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் இக் கூட்டத்தில் பலதரப்பட்ட விடயங்கள் விவாதிக்கப்படும் என்று சொன்னார்.

இருநாடுகளுக்கு இடையிலான உறவுகள் பற்றியும் பரிசீலிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

## சுதந்திர ராஜ்யம் பற்றி பாலஸ்தீனியர் விளக்கம்

சுய ஆட்சி தொடர்பான திட்டம் ஒன்றை இஸ்ரேலிடம் கையளித்துள்ளதாகப் பாலஸ்தீனியர் நேற்று முன் தினம் அறிவித்தனர்.

இடைக்காலம் முடிவடைந்ததும் சுதந்திர பாலஸ்தீனிய ராஜ்யம் உருவாவது சம்பந்தமாகவும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாஷிங்டனில் நடைபெறும் மேற்காசியச் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றும் இஸ்ரேலியத் தரப்பினர் இத்திட்டம் பற்றிய தம் கருத்துக்களை நேற்று வெளியிட்டிருந்தனர்

அவர்கள் இத்திட்டத்தை நிராகரிப்பர் என்று எதிர்பார்க்கப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## இராமகிருஷ்ண ஜெயந்தி

ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்தி விழா ஸ்ரீ இராமகிருஷ்ண சேவா ஆச்சிரமத்தின் ஆதரவில் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கொக்குவில் ஸ்ரீராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரியில் நடைபெறும். பூஜை, பஜனை, பேச்சு முதலிய நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

### உலகக் கோப்பை கிரிக்கெட்

## இந்தியா தன் முதல்வெற்றியை பாகிஸ்தானுக்கு எதிராகப்பெற்றது

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று சிட்னியில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்குமிடையில் நடைபெற்ற போட்டியில் இந்திய அணி 43 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 49 ஓவர்களில் 7 விக்கற்றுகள் இழப்பிற்கு 216 ஓட்டங்களை பெற்றது. ரவி சாஸ்திரியின் இடத்திற்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட புதுமுகம் சாவியாவாட் 49, கபில்தேவ் 35, டெண்டுல்கார் ஆட்டம் இழக்காமல் 54 ஓட்டங்களையும் பெற்றனர்.

பாகிஸ்தான் அணி அதன் துடுப்பாட்டத்தில் 48.1 ஓவர்களில் சகல விக்கற்றுகளையும் இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது. அமீர் சாகிட் 62, யாவிட் மியண்டாட் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

இப்போட்டியில் சிறந்த வீரராக டெண்டுல்கார் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (16)

### தீவுப்பகுதியிலிருந்து

## ஐந்து கர்ப்பிணிகள் யாழ்ப்பாணம் வந்தனர்

தீவுப் பகுதியில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் எதுவித மருத்துவ வசதியுமின்மையால் அவதிப்பட்டுக்கொண்டிருந்த ஐந்து கர்ப்பிணிகள் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் கொண்டுவரப்பட்டு யாழ் பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கர்ப்பிணிகள் நயினாதீவு, நெடுந்தீவு போன்ற இடங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (47-07)

### பண்டிதர் குடியிருப்பில்

## கமலாசனி வித்தியாசாலை திறக்கப்பட்டது

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களுக்காக செற்பலியில் பண்டிதர் குடியிருப்பில் அமைக்கப்பட்ட பாடசாலையை நேற்று அரசாங்க அதிபர் திறந்து வைத்தார்.

அறுநூறு பிள்ளைகள் கல்வி பயிலக் கூடியபதினொரு வகுப்பறைகளைக் கொண்ட இப் பாடசாலை 15 நாள்களுக்குள் கட்டி முடிக்கப்பட்டது. இதுகமலாசனிவித்தியாசாலை என்ற பெயரில் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பண்டிதர் குடியிருப்பில் இரண்டு மாதங்களுக்குள் 600 குடியிருப்பு மனைகள், பாலர் பாடசாலை, ப. நோ. கூ. சங்க கட்டிடம் மற்றும் சமூகக் கட்டிடங்கள் முதலானவை உருவாக்கப்பட்டுள்ளன

குடியிருப்பு அமைத்தற்கான செலவில் யாழ். செயலகம் 75 சதவீதத்தையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 25 சதவீதத்தையும் பொறுப்பேற்றுள்ளது.

கமலாசனி வித்தியாசாலையின் தளபாடக் குறைபாடுகளையும், ஆசிரியர் பற்றாக் குறையையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கவனத்திற் கொண்டுள்ளது.

இப் பாடசாலைத் திறப்பு விழாவின் போது மேலதிக அரசாங்க அதிபர், கல்விப் பணிப்பாளர் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் உட்பட பல திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

### பட்ஜட் எதிர்ப்பு தொடர்கிறது

## மூவாயிரம் பெண்கள் உட்பட நாற்பதாயிரம் பேர் கைது

இந்திய மத்திய அரசின் பட்ஜட்டை எதிர்த்து நேற்று தமிழகம் எங்கும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி தடையையும் மீறி ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

சென்னை கோயம்புத்தூர், சேலம், ஈரோடு பகுதிகளில் பலர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

மூவாயிரம் பெண்கள் உட்பட நாற்பதாயிரம் கட்சித் தொண்டர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி நேற்றுத் தெரிவித்தது.

## தீவுப்பகுதிக்கு வருமாறு வைத்தியருக்கு அழைப்பு

தீவுப்பகுதியில் கடமையாற்றிய வைத்திய உயரதிகாரி ஒருவர் இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்து தற்போது யாழ் பொது மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவில் கடமையாற்றி வருகிறார். இவரை தீவுப் பகுதிக்கு வந்து உடன் கடமையாற்றுமாறு அரசினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த மாதம் இதற்கான அறிவித்தலை அரசு இவ் வைத்தியருக்கு அனுப்பிவைத்துள்ளது.

இவர் தீவக வைத்திய சாலைக்கு பொறுப்பான உயரதிகாரியாகப் பணியாற்றும் படி பதவியுயர்வு கொடுக்கப்பட்டே தீவகப்பகுதிக்கு போகுமாறு அறிவித்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாம். 07

### புலிகளின்...

பிட்டதாகவும் லங்கா தீப குறிப்பிட்டிருந்தது.

இப்படியான தகவலை கணேசநாதனோ அல்லது வேறு எந்த அரசஉயர்அதிகாரிகளோ வழங்கவில்லை எனவும், அரச கட்டுப்பாடில்லாத பகுதியிலும் நிர்வாகம் சீர்குலைவின்றி நடப்பதாகவே கணேசநாதன் கூறியிருந்தார் எனவும் தகவல் திணைக்களம் நேற்றுக் குறிப்பிட்டது.

### அரசுக்கு எதிராகக் கூட்டம் நடத்திய

## பல்கலைக்கழக மாணவர்கள் பிக்குகள் 16 பேர் அரச படையால் கைது

தென்னிலங்கையில் நான்கு தினங்களுக்கு முன்னர் பௌத்த விகாரை ஒன்றில் அரச எதிர்ப்புக் கூட்டம் நடத்திய 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

16 பேரும் ஜே. வி. பி. உறுப்பினர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்கள் தற்போது எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என இதுவரை அறிவிக்கப்படவில்லை.

அரசின் கல்விக்கொள்கையை எதிர்த்து இந்தக் கூட்டம் நடைபெற்றதாக பி.பி.ஸி. குறிப்பிட்ட 16பேரில் 6 பேர் பல்கலைக்கழக மாணவ அமைப்புத் தலைவர்கள் எனவும் சிலர் புத்த பிக்குகள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆட்சியை எவர் எதிர்ப்பினும் அவர் ஜே. வி. பி. எனக் கூறப்பட்டு அரச படைகளால் நசுக்கப்படுவதாக பல்கலைக்கழக மாணவர்களில் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

### அதிகாரிகள் ஒப்புக்கொள்கின்றனர்

## முன்னேறிய பகுதிகளில் கூட படையினரை நிறுத்த முடியாது

வவுனியாவில் இதுவரை முன்னேறிய பகுதிகளில் கூட தொடர்ந்து படையினரால் நிலை கொண்டிருக்க முடியாது என இராணுவ அதிகாரிகள் குறிப்பிட்டதாக பி.பி.ஸி நேற்று குறிப்பிட்டது

போதிய ஆட்பலம் தம்மிடம் இல்லையெனவும் இதனால் படையினரை பரவலாக நிறுத்தி வைக்கமுடியாது நடவடிக்கை முடிந்து படையினர் முகாம்களுக்கு திரும்ப வேண்டிய நிலையே உள்ளது எனவும் இராணுவ அதிகாரிகள் குறிப்பிட்டதாக பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது

## பொட்டம்மானுக்கு எதிராக ஸ்ரீலங்காவும் குற்றப்பத்திரிகை

அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன கொலை, கூட்டுப்படைத்தலைமையகக் குண்டுவெடிப்பு ஆகியவற்றுடன் புலிகளின் உளவுப் பிரிவு தலைவர் பொட்டம்மானுக்கு தொடர்பு உண்டு என ஸ்ரீலங்கா பொலிஸாரும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவுள்ளனராம்.

இது குறித்து பொலிஸார் சட்டமா அதிபருடன் தொடர்பு கொண்டு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வது குறித்து ஆராய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஆட்சியை எவர் எதிர்ப்

### வீரச்சாவு

மணலாறில் நடைபெற்ற தாக்குதலில் மேஜர் சதாசு (ஆ. அருளப்பு அடம்பன்) வீரச்சாவு எய்தினார்.

### விபத்து மரணம்

நேற்று முன்தினம் இரவு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்ற வீதிவிபத்தொன்றில் 28 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் மரணமடைந்துள்ளார்

கறுப்பு நிறம் உயரம் 5 அடி கொண்ட இவர் இறக்கும் போது சதுரக்கோடு போட்ட மண்ணிற பச்சை நிறம் கலந்துள்ள சாரமும் சாம்பல் நிற நீளக்கை சேட்டும் அணிந்திருந்தார்.

இவரது சடலம் யாழ் போதனாவைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

### கப்பலில் உணவுமுத்திரை

கடந்த ஒக்ரோபர் முதல் பெப்ரவரி மாதங்களுக்குரிய மாணவர் மதிய உணவு முத்திரை எதிர்வரும் 7ஆம் திகதி பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் லிவ்லிலி கப்பலில் எடுத்துவரப்படுவதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன 47

### இலவச வகுப்புகள் ஆரம்பம்

மாணவர் இயக்கத்தின் விடுதலைப்புலிகள் ஆதரவில் அரியாலையில் அமைந்துள்ள ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் ஆண்டு 5 தொடக்கம் 11 வரை இலவச வகுப்புகள் இன்று மற்பகல் 3-00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது என்பதனை விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் அறிவித்துள்ளது.

### இன்றைய ஆட்டங்கள்

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று மேற்கிந்திய தீவுகள் அணி எதிர் தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து அணிகளிடையிலான ஆட்டங்கள் நடைபெறும்:

### போராட்ட இணைவு

கிளிநொச்சியில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த தாய்மார்கள் தமது பிள்ளைகளை விடுதலைப் போராட்டத்தில் இணைக்கும் முகமாக விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

### முத்தமிழ் விழா

## பயனுள்ள பெறுபேறுகளை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும்

எர் வரும் மே மாதத்துக்குள் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் நடத்தவிருக்கும் இரண்டாவது முத்தமிழ் விழாச் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் கலை பண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலகத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

அதில் கருத்துத் தெரிவித்த விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்கள் "கடந்த ஆண்டில் நடைபெற்ற முத்தமிழ் விழாவை விட இம் முறை மிகச் சிறப்பாக முத்தமிழ் விழா நடத்தப்பட வேண்டும் முத்தமிழ் விழா பயனுள்ள பெறுபேறுகளை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும்" என்றார்,

அவர் மேலும் கூறுகையில் "விடுதலைப் புலிகள் தனியாக ஆயுதப்போராட்டத்தை நடத்துபவர்கள் மட்டுமல்ல தமிழ் மக்கள் மனதை வென்றெடுக்கும் அபார திறமை கொண்டவர்கள் என்று கடந்த முறை நடைபெற்ற முத்தமிழ் விழா பற்றி பல பத்திரிகைகள் கருத்து வெளியிட்டிருந்தன அதனால் காத்திரமான ஒருதாக்கத்தை ஏற்படுத்தும் விழாவாக இது அமைய வேண்டும்" எனவும் குறிப்பிட்டார்

"இம் முறை முத்தமிழ் விழா யாழ், மாவட்டத்தில் மட்டுமல்ல முல்லைத்தீவு, கிளிநொச்சி முதலான வன்னிப் பிரதேசங்களிலும் பகுதி வாரியாகவும் நடத்தப்படும்" எனத் தெரிவித்தார், இவ் விழா ஓர் இலட்சிய நோக்கினை மக்களிடையே வேரூன்றச் செய்யும் பாங்கில் நடத்தப்பட வேண்டும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இம் முறை சேர்த்துக் கொள்ளப்படும் புதிய அம்சங்களில் பேராளர்களால் கட்டுரை சமர்ப்பித்தலும் அவற்றை ஆய்வு செய்தலும் இடம் பெறவுள்ளது.

விழாக்குழுவினர், இயல், இசை, நாடகத்துறைக்குத் தனித்தனிக் குழுவினர்; ஆய்வரங்கும் பொறுப்பாளர்கள், மலர் வெளியீட்டுக் குழுவினர், ஒலி, ஒளி அமைப்புக் குழுவினர் என்றவாறு பலரும் நியமிக்கப்பட்டனர்:

பல் துறை சார்ந்த பிரமுகர்கள், அறிஞர்கள், கலைஞர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் இக் கூட்டத்தில் பங்கு பற்றினர்

முத்தமிழ் விழாவுக்காக தனியாகச் செயலகம் ஒன்றும் திறக்கப்பட்டுள்ளது.

### ஜனதா தள், இடதுசாரிகள்

## தேர்தல் ஆணையாளருக்கு எதிராகப் பிரேரணை

இந்திய தலைமைத் தேர்தல் ஆணையாளர் ரி. என். சேஷனுக்கு எதிராக அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணையைக் கொண்டுவர ஜனதா தள் கட்சியும், இடதுசாரி கட்சிகளும் முடிவு செய்துள்ளன

இப்பிரேரணையைப் பாராளுமன்றத்தில் கொண்டுவரும் பொருட்டு 122 எம்பிக்கள் கையெழுத்திட்ட மகஜரை வி பி சிங் தலைமையிலான மேற்படி கட்சிகளின் குழுவினர் சபாநாயகரிடம் நேற்றுக் கையளித்தனர்.

தேர்தல் ஆணையாளர் சர்வாதிகாரத்தனமாக நடப்பதாகவும் இந்திரா காங்கிரஸ் அல்லாத கட்சிகளுக்கு எதிராகச் செயற்படுவதாகவும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி'லஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 05-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது